1979 நவம்பர் 8]

சுந்தரபாண்டியம் பகுதிகளில் தண்ணீர் தீர்வை விதிப்பு.

*வினா எண் 145—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78—ல் திருவில்லிப்புத்தூர் தொகுதி சுந்தரபாண்டியம் அருகே உள்ளே கண்மாய்களுக்கு பிளவக்கல் அணைக்கட்டில் இருந்து தண்ணீர் விடாமலேயே தண்ணீர் வரி போடப்பட்டுள்ளதாக விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் மனு கொடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தண்ணீர் எங்கெங்கே பாயவில்லையோ, அப்படி பாயாத நிலத்திற்கு தண்ணீர் தீர்வை வசூல் செய்தால், அதை ரத்து செய்ய வேண்டும். திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த பிளவுக்கல் அணைக்கட்டு திட்டத்திலிருந்து வத்ராயிருப்பு, நத்தம்பட்டி, மல்லி, சுந்தரபாண்டியம் ஆகிய பிர்க்காக்களுக்கு தண்ணீர் வரவில்லை. ஆனால் வரி வசூல் செய்து இருக்கிறார்கள். 14 (சி)—ல் வரவு செய்யப்படவில்லை, சுந்தரபாண்டியம் கிராம மக்கள் கொஞ்சம் விவரம் தெரிந்த காரணத்தால், அதிக தீர்வை செலுத்தியதை ரத்து செய்து கொண்டு விட்டார்கள். ஆகவே 14(சி)—ல் வரவு வைக்காத அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அண்மைக்காலத்தில தான் இந்த உத்தரவை போட்டிருக்கிறது. தண்ணீர் ஆயக்கட்டில் இருந்தாலும் ஆயக்கட்டில் இருந்தது என்பதற்காக தண்ணீர் தீர்வை வசூல் செய்யக்கூடாது, அங்கே தண்ணீர் குறைவாக இருக்கிறது, அல்லது கிடைக்காமல் இருக்கிறது என்பதால் அங்கேயுள்ளவர்கள் பாதிக்கபட்டால் தண்ணீர் தீர்வை வசூல் செய்யக்கூடாது என்று இந்த அரசு உத்தரவு போட்டு இருக்கிறது. இந்த மாமன்றத்தின் மூலமாக ஒன்றை நான் தெரிவித்துக்கொள்வேன், எங்கேயாவது தண்ணீர் தீர்வை வசூலிக்கப்பட்டு, அதன் பிறகு பயிர்கள் நாசமாகி விட்டன என்றால், பாதிக்கப்பட்டவர்கள் அங்கேயிருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடத்தில் மனு கொடுத்தால் அவர்கள் உடனடியாக அதை கவனிப்பார்கள்.